TAMIL NADU OPEN UNIVERSITY
13 DEC 2017
REGISTRAR OFFICE

சுருக்கம்

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் நேரடிமுறையில் (Regular Mode) முழுநேரம் / பகுதி நேரத்தில் சேர்ந்து பெறப்பட்ட எம்.ஃபில், பி.எச்டி. பட்டங்கள் அரசு மற்றும் அரசு சார் நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் பணிநியமனம் மற்றும் பதவி உயர்வுக்கு ஏற்புடையது – அங்கீகரித்தல் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (கே1) த்துறை

அரசாணை (நிலை) எண்.355

நாள்: 12.12.2017
ஹேவிளம்பி, கார்த்திகை 26,
திருவள்ளுவராண்டு 2048

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.91, உயர்கல்வி (கே2) த்துறை; நாள் 3.4.2009.
2. தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழக பதிவாளர் அவர்களின் கடிதம் எண்.த.நி.ப.க/அரசு– 68/2017/119, நாள்:21.07.2017

-----

ஆணை:

மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் அஞ்சல் வழி கல்வி / தொலைதூரக்கல்வி / திறந்தவெளி பல்கலைக்கழகம் மூலம் பெறப்பட்ட எம்.ஃபில் / பி.எச்டி., பட்டம் அரசு பணிகளில் நியமனம் செய்வதற்கும் மற்றும் கல்லூரி, பல்கலைக்கழகம் மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் ஆசிரியராக நியமனம் செய்வதற்கும் தகுதியற்றவை என தெரிவித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தின் பதிவாளர் அவர்கள் பல்கலைக்கழக நிதி நல்கைக்குழு (University Grants Commission) தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் நேரடிமுறையில் (Regular Mode) முழுநேர / பகுதிநேர எம்.ஃபில், பி.எச்டி., படிப்புகளை நடத்த அனுமதியளித்துள்ளது என்றும், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகச் சட்டத்திலும் ஆய்வுப்படிப்பு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது என்றும் இதன்படி மேற்குறிப்பிட்ட ஆய்வுப் படிப்புகளை நடத்த பல்கலைக்கழக ஆட்சிக்குழுவும் இசைவளித்துள்ளது என்றும் பல்கலைக்கழக நிதி நல்கைக்குழுவின் (University Grants Commission) புதிய வழிகாட்டுதல் நெறிமுறைகள் 2016–இன்படி உதவிப்பேராசிரியர்கள் 4 பி.எச்டி., 1 எம்.ஃபில் மாணக்கர்களுக்கும், (4 பி.எச்டி., +1 எம்.ஃபில்), இணைப்பேராசிரியர் 6 பி.எச்டி., 2 எம்.ஃபில் மாணாக்கர்களுக்கும், (6 பி.எச்டி., + 2 எம்.ஃபில்), பேராசிரியர் 8 பி.எச்டி., 3 எம்.ஃபில் மாணாக்கர்களுக்கும் (8 பி.எச்டி., +

. . . 2

3 எம்.ஃ.பில்) வழிகாட்டியாகச் செயல்பட முடியும் என்றும், தற்போது தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்திற்கு பல்கலைக்கழக நிதி நல்கைக்குழு (University Grants Commission) ஆய்வுப்படிப்பினை நடத்துவதற்கு அனுமதி அளித்துள்ளது என்றும், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் பல்வேறு கல்விப் புலங்கள் (Academic Schools) வழியாக நேரடிமுறையில் (Regular Mode) பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் விதிமுறைகளின்படி, தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் நிரந்தர உதவிப்பேராசிரியர் / இணைப்பேராசிரியர் / பேராசிரியர்களின் மேற்பார்வையில் பகுதிநேர / முழுநேர முறையில் எம்.ஃ.பில், பி.எச்டி., ஆய்வு படிப்புகளை நிறைவு செய்து பட்டம் பெற்றவர்களின் ஆய்வுப் பட்டங்களை அரசு மற்றும் அரசு சார் நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் பணி நியமனம் மற்றும் பதவி உயர்வுக்கு ஏற்புடையதாக அங்கீகரித்து ஆணை வெளியிட வேண்டும் என்றும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழக பதிவாளரின் மேற்காண் கருத்துருவினை கவனமுடன் ஆய்வு செய்த அரசு, பள்ளி இறுதித் தேர்வு (பத்தாம் வகுப்பு) மற்றும் பள்ளி மேல்நிலை கல்வித் தேர்வு (+2) தேர்ச்சி பெற்ற பின்னர் பல்கலைக்கழக மானியக் குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் பெறப்படும் பட்டங்கள் மற்றும் அதனைத் தொடர்ந்து பெறப்படும் முதுகலைப் பட்டங்களைத் தொடர்ந்து, தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் நேரடி முறையில் (Regular mode) முழு நேரம் / பகுதி நேரத்தில் சேர்ந்து பெறப்பட்ட எம்.ஃ.பில்., பி.எச்டி., பட்டங்களை அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் பணிநியமனம் மற்றும் பதவி உயர்வுக்கு ஏற்புடையது என அங்கீகரித்து ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுனீல்பாலீவால்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
துணைவேந்தர்/பதிவாளர் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்ழகம், சென்னை-15
இயக்குநர், கல்லூரிக் கல்வி இயக்குநரகம், சென்னை-6
பதிவாளர், உயர்கல்வித்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் அனைத்துப் பல்கலைக்கழகங்கள்,
பணியாளர் மற்றும் நிருவாகச்சீர்திருத்தத் துறை, சென்னை-9.
செயலர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 003.
செயலர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை-6
முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர், உயர்கல்வித்துறை, சென்னை-9
மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-600 009
இ.கோ. / உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

12/12/2017
பிரிவு அலுவலர்.

12/12/17